# வித்தியம்

NEDA

18வது ஆண்டு விழா

## நற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்தி அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்தி அமைப்பு

**Natpiddimunai Education Development Association**

**(NEDA)**

# நெடாவின் தட்டிக் கொடுத்தல்

**பல்கலைக்கழக, கல்விக்கல்லூரி அனுமதி பெற்ற, க.பொ.த சாதாரண தர பரீட்சை, 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தி பெற்றோருக்கான கௌரவித்தல்**

பிரதம அதிதிகள்

**திரு.K. சந்திரலிங்கம்**

(அதிபர் - கமு/ கணேச மகா வித்தியாலயம், சேனைக்குடியிருப்பு)

**திரு.S. ரவீந்திரன்**

(அதிபர் - கமு/ சிவசக்தி வித்தியாலயம், நற்பிட்டிமுனை)

கௌரவ அதிதி

**திரு.K. கனகராஜா**

(மில்கோ நிறுவன பிராந்திய முகாமையாளர்)

காலம்

**24.08.2010**

இடம்


**பாலர் பாடசாலை, நற்பிட்டிமுனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்தி அமைப்பு கடந்த 17 ஆண்டுகளாக நற்பிட்டிமுனையின் கல்வி அபிவிருத்தியில் பங்காற்றி வருகிறது. நற்பிட்டிமுனையிலிருந்து உயர் கல்வி வாய்ப்புகளுக்குத் தெரிவானோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் போக்கு இங்கு சிறந்த கற்றல் சூழல் காணப்படுவதைச் சுட்டிக் காட்டுகிறது. கல்வி வாய்ப்புக்களைப் பெற்றவர்களை மட்டுமன்றி நற்பிட்டிமுனை மண் ஈன்ற பல்வேறு துறைகளில் உயர்வு பெற்ற பெருமக்களையும் எமது அமைப்பு பாராட்டி கௌரவிக்கும் விழாவை செய்து வருகின்றது. அந்த வகையில் இந்த வருடம் முதல் **“வித்தியம்”** எனும் நினைவிதழ் ஒன்றினையும் வெளியிடுகிறது. வாழ்வுக்கான வித்தாய் இயம்பப்படுவது கல்வி என்பதை நாம் நினைவுறுத்தி உழைக்கவேண்டும். நற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்தி அமைப்பின் பணிகள் தொடர யாவரும் முன்னிற்போமாக..

அன்புடன்
**K.ருத்திரமூர்த்தி**
(தலைவர் - நெடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்தி அமைப்பின் தோற்றமும் பணிகளும்

நற்பிட்டிமுனையில் கல்வி வளம் மேலோங்க வேண்டும் எனும் அவா கொண்டு காலத்துக்குக் காலம் பல பெருந்தகைகள் தம்மாலான பணிகளைச் செய்தே வந்துள்ளனர். அவை பெரும்பாலும் தனி மனித கல்விச் சேவையாகவே மிளிர்ந்தன. பல பட்டதாரிகள் நற்பிட்டிமுனையில் உருவாக இவை கால் கோளிட்டன. நற்பிட்டிமுனை கிராமத்திற்கு கல்விச் சொத்துத் தேடல் குறித்த கருத்து ஆளப்பதிந்ததொன்றாகும்.

இத்தகைய கல்விச் செயற்பாடுகளின் தொடர்ச்சியாக 1993 ஆம் ஆண்டு நற்பிட்டிமுனைக் கல்வி அபிவிருத்தி அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. உயர்தர வகுப்புச் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருந்த இளைஞர்கள் தமது கிடைத்தகு நேரத்தை பயனுறுதியுடன் செலவிடவேண்டி இவ் அமைப்பின் பால் திரண்டனர். அமைப்பின் நோக்கங்களும் செயற்பாடுகளும் வகுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஒரு கல்விச் செயற்பாட்டு அமைப்பாக நெடா அமைப்பு இயங்கத் தொடங்கியது. ஆரம்ப வகுப்புகள் முதல் இடைநிலை வகுப்புகள் வரையிலான மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, தமிழ் உள்ளிட்ட பல பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில வகுப்புகளுக்கு உயர்வகுப்பு பாடங்களும் நடைபெற்றன. நற்பிட்டிமுனை மட்டுமன்றி அயல் கிராம மாணவர்களும் நன்மை பெறத் தொடங்கினர்.

பாடசாலை வகுப்புகளில் பின்தங்கியிருந்த மாணவர்கள் பலர் முன்நிலை நோக்கி நகரத்தொடங்கினர். இது பாடசாலை ஆசிரியர்களால் அவதானிக்கப்பட்டது. இதனால் பாடசாலைகளிலும் நெடா வகுப்புகளுக்கு செல்லுமாறு மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். கல்வியில் பெற்றோரின் பங்குபற்றுதல்களை அதிகரிக்கும் நோக்கிலான ஒன்றுகூடல்கள் பல ஒழுங்குசெய்யப்பட்டன. இத்தகைய செயற்பாடுகள் நற்பிட்டிமுனையில் கல்வி முனைப்புகளுக்கு உறுதுணையாயின. இத்தகைய சேவையை நெடா அமைப்பு தொடர்ச்சியாக 17 ஆண்டுகளாகச் செயற்படுத்தி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடா அமைப்பு தன் கல்விப்பணிகளில் ஒரு செயற்பாடாக ஆண்டுதோறும் கல்வியில் சாதனை புரிந்தவர்களையும், பல்வேறு துறைகளில் மேலோங்கி இருப்பவர்களையும் கௌரவித்து வந்துள்ளது. பல்கலைக்கழக அனுமதி, கல்விக்கல்லூரி அனுமதி, சாதாரணதரப் பரீட்சைச் சாதனை, 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை என சாதனை புரிந்தவர்கள் கௌரவிக்கப்படுகின்றனர்.

இந்தப் பணிகளில் ஒரு மைல்கல்லாக இம்முறை **"வித்தியம்"** எனும் இச்சிறுநூல் வெளியிடப்படுகிறது. சாதனை புரிந்தவர்களை இது பதிவு செய்து கிராம முன்னேற்றத்திற்கு ஆதாரமாய் நிற்கும். நெடாவின் பணிகளும் அதில் தன்நலன் கருதாது உழைக்கும் குழாமும் என்றும் மனங்கொள்ளப்படவேண்டியவர்களாவர்.

சஞ்சீவி சிவகுமார்
(ஆலோசகர் - நெடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடா என்னும் கனிமரம்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்"**

ஒருவன் மனிதனாகப் பிறந்துவிட்டால் மட்டும் போதாது அவனது புகழும் பெருமையும் மற்றவர்களால் மதிக்கப்படக்கூடியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் அவனுக்கென ஒரு இலட்சியப்பாதையில் செயற்பட்டு அது மற்றவருக்கும் பயனளிக்கும் கனிமரமாக இருக்கச் செய்ய வேண்டும். இவ்வாறாக நற்பிட்டிமுனை கிராமத்தில் சிறந்த கனிகளை தனது சேவையில் வழங்கிக் கொண்டிருக்கும் நல்மரம் தான் நற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்தி அமைப்பாகும்.

சுயநலத்துடனும் அடுத்தவனின் நலனை எண்ணிப் பார்க்காத குரோதம் நிறைந்த பொருளாதார நோக்குடனான மனித சமூகத்தில் எந்தவிதமான இலாப நோக்கமின்றி முழுமையாக சேவை நோக்குடன் இலவசமாக கல்வி என்னும் இனிய கனிகளை சுவைக்கக்கூடிய வகையில் சுத்தமாக வழங்கும் அற்புதமான அமைப்புத்தான் நெடா.

**எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்** என்பதற்கு அமைய நற்பிட்டிமுனையின் கண்ணாக விளங்கி கல்வி வழங்குவது நெடா என்றால் மறுக்கமுடியாது. இது கடந்த 18 வருடமாக தனது சேவையின் மூலமாக பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. அதற்கு ஆதாரமாக சிறந்த மாணவர் சமூகத்தை உருவாக்கித்தந்துள்ளது.

அவர்களை சிறந்த பிரஜைகளாக உருவாக்கியதுடன் உயர் பதவியாளராகவும் உருவாக்கியுள்ளது. குறிப்பாக பல பொறியியலாளர்கள், வைத்தியதுறையாளர்கள், ஆசிரியர்கள், ஏனைய உயர் பதவியாளர்களாக பல சமூகத்திற்கு கோடிட்டு காட்டியுள்ளது.

நெடா அமைப்பானது கல்வி என்னும் போக்குடன் நின்று விடாது. சமூகத்தில் பதவியாளரை கௌரவித்தல் அதன் ஒவ்வொரு ஆண்டு நிகழ்வின் போதும் அடையாளப்படுத்திக் கொண்ட பணியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கும் அப்பால் கல்விப்பணியின் மற்றும் ஓர் பணியாகிய தட்டிக்கொடுத்தல் பணியும் இதன் காலம் தவறாத ஓர் பணியாகும். 05ம் ஆண்டு புலமைப் பரீட்சை மாணவர்கள், க.பொ.சாதாரண தரப் பரீட்சை மாணவர், பல்கலைக் கழக, கல்வியியற் கல்லூரி மாணவரை கௌரவித்தல் என்பன அதன் பிரதான தட்டிக்கொடுத்தல் பணியாக மேற்கொள்வது இதன் ஏனைய பணிகளுக்கு சான்றாகும்.

எனவே எந்தக் கோணத்தில் எடுத்து நோக்கினாலும் நெடாவின் பணிகள் பொன்னால் வடித்தெடுத்த பணியாக திகழ்கின்றன. கல்வித்துறையில் உச்ச சேவையாற்றும் நெடா இன்னும் பல ஆண்டு நிலைத்திருந்து எமது கிராமத்தில் கல்விக் கனிகளை சொரிய வேண்டும் என இறைவனை வேண்டி, வாழ்த்தி விடைபெறுகிறேன்.

S. ரகுவரன்
(மாணவன்)

## பாராட்டிக் கௌரவிக்கின்றோம்



நற்பிட்டிமுனை மண் ஈன்ற மகனாக உயர் பதவிநிலை வகிக்கும்

**கனகசூரியம் கனகராஜா**

அவர்களை நெடா அமைப்பு பாராட்டி கௌரவிக்கின்றது.

**கல்வி**

கமு/சிவசக்தி வித்தியாலயம், உவெஸ்லி உயர்தரப் பாடசாலை.

**உயர் கல்வி**

விலங்கு பரிபாலன தொழில்முறை Diploma (வெலிகறை)
பால் உற்பத்தி, அபிவிருத்தி (இந்தியா)

**கிராம அபிவிருத்தி - நற்பிட்டிமுனை.**

1. கலைக்கதிர் மன்ற செயலாளர்
2. கூட்டுப்பிரார்த்தனை குழு உறுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1st Row - K.Akalika, N.Surekka, S.Darmini, R.Suganya, R.Ketharani

2nd Row - K.Sithuja, N.Urmila, N.Sivarohini, S.Saththiya, S.Viththiya

3rd Row - T.Dinesh, A.Anojan, K.Ruthramoorthy, R.Kisho, R.Rehananth

4th Row - A,Akeelan, A.Yathees, V.Ravindthraraj, G.Litheepan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் பிள்ளைகளின் கற்கும் திறனை மேம்படுத்துங்கள்

■ பிள்ளைகள் சுயமாக எதையும் தீர்மானிக்கின்ற நிலையை அடையும் வரை அவர்களை வழிநடத்த வேண்டிய கடமை பெற்றோர்களுக்கு உரியது. உங்களது பங்கை நீங்கள் சரிவர செய்ய வேண்டும்.

■ கூடியவரை பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புங்கள். அனாவசியமாக விருந்து விழாக்கள் என அழைத்துச்சென்று அவர்களுடைய பாடசாலைக் கல்வியில் பிரச்சனைகளை ஏற்படுத்தாதீர்கள்.

■ பிள்ளைகள் பாடம் படிப்பதை, எழுதுவதை கவனியுங்கள். அவர்கள் சரியான உச்சரிப்புடன் படிப்பதும் பிழையின்றி எழுதுவதும் முக்கியமானது. அத்துடன் கையெழுத்து அழகாயிருக்க எழுத்துப்பயிற்சி அளியுங்கள்.

■ பத்திரிகைகள் படிப்பதையும் தொலைக்காட்சியில் பயனுள்ள நிகழ்சிகள் பார்ப்பதையும் ஊக்குவியுங்கள். ஆனால் தொலைக்காட்சி நாடகங்கள், களியாட்ட நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்படங்கள் பார்ப்பதை இயலுமானவரை நிறுத்த முயற்சியுங்கள்.

■ நூல்நிலையம் செல்லும் பழக்கத்தை தூண்டுங்கள். முடிந்தால் வீட்டிலேயே ஒரு சிறிய நூலகத்தை உருவாக்கிக் கொடுங்கள். அதில் அகராதி, திருக்குறள், வரைபடங்கள், கலைக்களஞ்சியம் போன்ற அடிப்படைப் புத்தகங்கள் அவசியமாக இருக்கவேண்டும்.

■ படிப்பதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம். படிப்பறை காற்றோட்டம், வெளிச்சம், அமைதி நிரம்பியதாய் இருப்பதுடன் ஆங்கிலத்தில் தினமும் ஒரு புது வார்த்தையை கற்றுக்கொடுத்து அதனை அன்றே உரையாடலில் பயன்படுத்தச்செய்யுங்கள்.

■ ஏதாவதொரு மூச்சுப் பயிற்சியைக் கற்றுக்கொடுங்கள். அத்துடன் தினமும் காலையில் உடற்பயிற்சி அல்லது மாலையில் விளையாட்டும் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ படிப்பதும் ஒரு உழைப்புத்தான். எனவே பிள்ளைகளின் உணவில் போதியளவு சத்துக்கள் உள்ளனவாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

■ ஆண்டுக்கு இருமுறையாவது பிள்ளைகளை மருத்துவ பரிசோதனைக்கு அழைத்துச் செல்லுங்கள். பிள்ளைகளின் புள்ளிகள் குறைவதற்கு பார்வைக்கோளாறு காரணமாக இருக்கலாம். எனவே தாமதமின்றி கண் மருத்துவரின் ஆலோசனையைப் பெறுங்கள்.

■ பிள்ளைகள் குறைந்த பட்சம் ஆறு மணிநேரம் உறங்க வேண்டும். இரவில் நெடுநேரம் படிக்கச்சொல்லி வற்புறுத்தாதீர்கள். மூளைக்கு ஓய்வு அவசியம். ஓய்வுக்குப்பின் அது புத்துணர்ச்சியுடன் இயங்கும். படிக்கின்ற நேரத்தை பாடத்திற்கேற்ப நேரசூசிப்படி படிக்கத் தூண்டுங்கள்.

■ சுற்றுப்புறத்தில் நோய்கள் பரவும்போது உங்கள் பிள்ளையின் குடிநீர் உணவு விடயத்தில் எச்சரிக்கையாக இருங்கள். குறிப்பாக சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.

■ பிள்ளைகள் படிக்கின்ற நேரத்தில் அவர்களது கவனம் படிப்பதில் ஒருமுனைப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். அவர்களது கவனத்தை திசை திருப்பும் காரியங்களைச் செய்யாதீர்கள். முக்கியமாக வானொலி தொலைக்காட்சி ஒலிகள் குறைக்கப்பட வேண்டும். தொலைபேசியில் பேசுவது மற்றவர்களுடனான அரட்டை போன்றவற்றைத் தவிருங்கள்.

■ பிள்ளைகள் யார் யாருடன் பழகுகிறார்களென்பதை கண்காணியுங்கள். அவர்களை வீட்டுக்கு அழைத்துவரச் செய்து அவர்களுடன் பேசுங்கள். நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விசயத்தில் நீங்கள் அவர்களுக்கு உதவாவிட்டாலும் தீயவர் சகவாசத்தை துண்டிப்பது அவசியம்.

■ உங்கள் பிள்ளைகளின் பேச்சிலோ செயலிலோ விரும்பத்தகாத ஏதாவது இருந்தால் அதனை முளையிலேயே கிள்ளி எறியுங்கள். அனைத்திலும் மேலாக ஒழுக்கம் முக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ பிள்ளைகளுக்கு வெற்றியைப் போலவே தோல்வியையும் பாவிக்க கற்றுக்கொடுங்கள். பிள்ளைகளை தாழ்வு மனப்பான்மைக்கோ சோர்வுறும் நிலைக்கோ தள்ளப்பட விட்டுவிடாமல் அவர்களுக்கு ஊக்கமளியுங்கள். தொடர்ந்தும் ஊக்குவித்துக் கொண்டே இருங்கள். அவர்கள் பெறுகின்ற சின்னச்சின்ன வெற்றிகளையும் மறவாமல் பாராட்டுங்கள். மற்றவர்களைப் பாராட்டவும் கற்றுக் கொடுங்கள். வாழ்வில் வெற்றிபெற அடிப்படையான பண்புகள் என்னென்ன என்பது பற்றி பிள்ளைகளுக்கு தெரிந்திருக்க வேண்டும்.

■ ஒவ்வொரு பண்புக்கும் உதாரணமாக ஒரு தொழிலதிபரைப் பற்றியோ சாதனையாளனைப் பற்றியோ மகானைப் பற்றியோ கதை போலச் சொல்லுங்கள்.

■ ஆற்றலை ஒருமுனைப்படுத்தவும் மனதை ஒருமுகப்படுத்தவும் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுங்கள். ஒவ்வொரு நாளும் தியானத்திலிருக்க கற்றுக் கொடுங்கள்


■ பிள்ளையின் நல்ல பழக்கங்களைப் போற்றி அவ்வப்போது பரிசில்களை அளியுங்கள். அதன்மூலம் தியவற்றிலிருந்து அவர்களைத் தடுத்துவிட முடியும். உண்மை பேசுவது பெரியவர்களிடம் மரியாதை காட்டுவது காலையில் முன்கூட்டியே எழுந்து விடுவது போன்றவை நல்ல பழக்கங்களாகும்.

■ பிள்ளைகள் பாடங்களில் குறைந்த புள்ளிகளைப் பெறும்போது அடுத்த தடவை உன்னால் கூடிய புள்ளிகளைப் பெறமுடியும் என்பது போன்ற பேச்சுக்கள் மூலம் அவர்களுக்கு தன்னம்பிக்கையூட்டுங்கள்.


■ உங்கள் குறிக்கோள்களை அவர்கள் மீது சுமத்தாதீர்கள். அவர்களுடைய ஆசை திறமை அறிவு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு அவர்களே தங்களுடைய குறிக்கோளை உருவாக்கிக் கொள்ள வழிகாட்டுங்கள். அவர்கள் அவர்களுடைய குறிக்கோளை அடையும் முயற்சியில் உறுதுணையாக இருங்கள்.

நெடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நெடா கலை நிகழ்வொன்றில்...



நெடாவின் 5ம் ஆண்டு நிறைவு விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடாவின் 10ம் ஆண்டு நிறைவு விழா



ஐரோப்பிய யூனியன் கட்டுரைப் போட்டியில் விருது பெற்றமைக்காகவும் இலக்கிய ஈடுபாட்டுக்காகவும் ச.சிவகுமார் கௌரவிக்கப்பட்டபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடா அமைப்பின் "தட்டிக்கொடுத்தல்" நிகழ்வொன்றில் அமரர்.ந.நல்லரெத்தினம் அவர்கள் தனிமனித கல்விச் சேவைக்காக கௌரவிக்கப்பட்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடா எனும் படிப்பகமே நீடூழி வாழியவே

'நெடா' என்னும் பெயர் கொண்ட கல்வியகமே
நிலத்திலும் நெஞ்சத்திலும் நிலைத்து நிற்கும் படிப்பகமே
மாணவச் செல்வங்களுக்கு கல்விச்செல்வம் தருவது-நீ
மகத்தான பணியாலே மனங்கவர்ந்து நிற்பது-நீ
அறிவுக்கு விடிவெள்ளி நீ; வாழ்வுக்கு ஒளிச்சுடர் நீ !

என்றென்றும் மாணவர் தம் கல்விக் கரங்கள்
உன்கால்களில் தினம்தினம் சரணடைய வேண்டியவைகள்
பத்து மாதங்கள் சுமை தாங்கினாள் தாய்
பல வருடங்கள் சுமை தாங்கினாய் நீ
அதனால் பெற்றதாயைவிடப் பெருமதி உனக்கென்பேன் நான் !

நற்பிட்டிமுனையிலே கற்பித்தற் பணிபுரியும் படிப்பகமே
நாலாபேருக்கும் நல்லதொரு நாயகன்போல் வாய்த்தாய் நீ
தாயின் வயிற்றிலிருந்து உலகை எட்டிப் பார்த்தபோது
தரணியிலே வாழ்வின் அர்த்தம் எதுவும் புரியவில்லை
அர்த்தங்கள் நீதானே கற்பித்தாய் ஆயிரம் நன்றிகள் உனக்கே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கு நிகராக உன்னைக் கண்டோம்
ஏழைகளுக்கு எழுத்தறிவித்த இறைவனாக உன்னைக் கண்டோம்
பலரதும் அறிவுக்கண்களை நீதானே திறந்து வைத்தாய்
பல்கலைக் கழகப் பட்டங்கள் எத்தனையோ அத்தனையும்
பேசரிய 'கல்வியகம்' உனக்கே அர்ப்பணம், சமர்ப்பணம்!

கல்வித் தெய்வம் உறையும் எம் கலாலயமே
கல்வியோடு கலை தந்தாய் ; கலையோடு வாழ்வு தந்தாய்
மரபுக் கவிதையும் நீயானாய் ; புதுக்கவிதையும் நீயானாய்
மாணவர் சேவையே மகேசன் சேவையாக நீ கண்டாய்
மதம் கடந்து இனம் கடந்து மகத்தான சேவை செய்தாய்!

கலங்கரை விளக்கமதாய் உன்னைக் கண்டோம்
கவினுறும் நிலத்தில் பூரணநிலவாக உன்னைக் கண்டோம்
சில வருடங்களாயல்ல பலவருடங்களாய் சேவை செய்தாய்
பதினேழு வருடங்களையும் இன்று நீ கடந்து விட்டாய்
பெருஞ்சேவை செய்துவிட்டாய் பெருமைகளை நிலைநாட்டி விட்டாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நெடாவே' நீ தலைநிமிர்ந்து செய்யும் சேவை

நெடுகிலுமே எங்கள் எல்லோருக்கும் இங்கு தேவை

பாடையது ஏறும்போதும் உன்னை நாம் மறக்க மாட்டோம்

கொடையாக நீயீந்த கல்விச்செல்வமதை கடைசிவரை விடமாட்டோம்

கனிவான உன் கல்விச்சேவை காலமெல்லாம் நிலைக்க
வாழ்த்துகிறோம் !

செல்வன் M.பவிராஜ்
(மாணவன்)

## கல்விக் கூடத்தில் கண்டெடுத்தவை

மண்மீது கொண்ட மனிதப் பிறப்பினால்
வழியில் குறுக்கிட நெடா எனும்
கருவறை வாழ்வில் கல்விப் பொக்கிஷத்தைக் - கண்டெடுத்தேன்.

நிலையில்லா இவ்விடத்தில் நிலையான கல்வியை
கலையாக பெற முனைகையில்
ஒழுக்கம் எனும் நேரிய பண்புகளைக் - கண்டெடுத்தேன்

கசடறக் கற்பதற்கு கண்தேடித்திரிகையில்
ஞான ஊற்றை அள்ளி வழங்கும்
கள்ளமில்லா உள்ளம் கொண்ட ஆசான்களைக் - கண்டெடுத்தேன்

கல்விக் கூடத்திலே கல்வித்தேனை உண்ணவரும்
மாணவத் தேனீக்களின் மலர்ச்சியான
நட்பெனும் மங்கா உறவைக் - கண்டெடுத்தேன்

த.சஷிந்தன்
தரம் - 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்கல்வி வாய்ப்பை பெற்றவர்கள்



A.Akeelan
Quantity Servering
Moratuwa University



T.Dinesh
Servering Science
Sapragamuwa University




R.Kisho
Physical Science
Eastern University



S.Kajendran
Physical Science
Eastern University




G.Litheepan
Mineral Science
Uwa Wellassa University



M.Paviraj
Physical Science
South Eastern University

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Y. Visnukanthan
Physical Science
South Eastern University



I.Sasikala
Arts
Eastern University



V.Chandrakanthi
Arts
Vavuniya Campus
(Jaffna University)



S.Pratheepa
Arts
South Eastern University



G Sinthuja
Arts
Eastern University



P.Puvanakumari
Arts
Eastern University



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



N.Sureka
Arts
Eastern University




T.Kumuthini
Arts
Eastern University



S.Thanureka
Maths
College of Education



A.Vijayajeevitha
Primary
College of Education



P.Thilipan
Primary
College of Education



A.Subani
Maths
College of Education

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



V.Ravindthraraj
Maths
College of Education



A. Yathees
Maths
College of Education

**2009ம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவன்**



A.Hariharan
G.C.E (O/L) 2009 Result
( 7A, B, C )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலைநோக்கி.....

மனிதனாகப் பிறக்கின்றவன் மண்ணுலகில் வாழ கல்வி மிக அவசியமாகும். அந்த வகையில் நற்பிட்டிமுனை மாணவர்களது அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்து சமூகத்திற்கு ஏற்புடைய நற்பிரஜையாக உருவாக்குவதில் அடித்தளமாக அமைந்தது "நற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்தி அமைப்பு" ஆகும்.

"கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு". கையளவு கற்ற கல்வியை மற்றோருக்கு கற்பிக்காதிருக்கும்போது அந்தக்கல்வி பயனுடையதாக அமையாது. அந்தவகையில் நற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்தி அமைப்பு (NEDA) கற்ற கல்வியை பயனுடையதாக அமைக்கவேண்டி தனது சேவையை 18 வருடங்களாக நிறைவேற்றி வருகிறது கண்கூடு. நற்பிட்டிமுனையிலிருந்து கல்விமான்கள் உருவாகுவதற்கு காரணகர்த்தாவாக பிரகாசித்துக் கொண்டிருப்பது "நெடா" (NEDA) என்றால் அது மிகையாகாது.

கல்வி ஒவ்வொருவருக்கும் அவசியமானது. அதனைத்தான் வள்ளுவர் "கண்ணுடையார் என்பார் கற்றோர்" (குறள்-393) என்று கூறினார். அந்தவகையில் கல்வியினை ஏழை-பணக்கார, இன-மத பேதமற்று, ஊர் வேறுபாடற்று கல்முனைப் பிரதேசத்தில் நற்பிட்டிமுனை எனும் ஊரில் வாடாத மலராக 18 வருடங்களைக் கடந்தும் கண் சிமிட்டிக் கொண்டிருக்கின்றது நெடா.

பணம் பணம் என்று பணம் சேர்க்க ஓயாது சிந்தித்துக்கொண்டிருக்கும் இன்றைய அவசர யுகத்தினில் பணத்துக்கு முக்கியத்துவமளிக்காது கல்விக்கு மதிப்பளித்து ஏழை எளியோருக்கு இலவசமாக கல்வியை வழங்கும் கல்வித்தாய்க்கு நற்பிட்டிமுனை மண் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளது.

நெடா அமைப்பில் 18 வருடங்களாக சேவையாற்றிய ஆசிரியர்கள், அதன் உறுப்பினர்களின் சேவை மனப்பான்மையும், தலைமைத்துவமும், முகாமைத்துவமும் அதன் வளர்ச்சியில் முக்கிய பங்காகும். அத்துடன் நெடா அமைப்புக்கு ஆதரவாக இருந்த பெரியோர்கள், ஊர்மக்கள், கல்விமான்கள், நலன்விரும்பிகள் போன்றோரின் வகிபங்குகளும் தான் நெடா அமைப்பு அபிவிருத்திப் பாதைக்கு வந்ததற்கு மூலகாரணம் எனலாம்.

நற்பிட்டிமுனை மாணவர்களை இலைமறை காயாக வாழாது வெளிச்சத்துக்கு கொண்டுவந்த அளப்பெரிய பங்கு நெடா அமைப்புக்கே சேரும். இவ்வமைப்பில் ஆசிரியராக பணிபுரியும் வேளையில் தங்களையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல முகாமைத்துவம், தலைமைத்துவம், மேடைப்பேச்சு, தெளிவான சிந்தனை மனப்பாங்குகளை வளர்த்துக்கொண்டு பல்கலைக்கழகம் மற்றும் கல்வியியற் கல்லூரிகளுக்குள் சென்று நற்பிரஜையாக உருவாக முடிகின்றது.

"இன்றைய மாணவர்களே நாளைய நாட்டின் தலைவர்கள்". இதனால்தான் "சிறுவர்களை என்னிடம் வர இடமளியுங்கள்" என இயேசுவும், "நல்லவைகள் அனைத்தையும் சிறுவர்களுக்கே அளியுங்கள்" என லெனினும் கூறியுள்ளனர். இந்த சிறுபராய பழக்கமே ஒருவரின் வாழ்வுக்கு அவசியமானது. அதனைத்தான் "தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பர். இச்சிறுபருவத்தில் ஊட்டப்படுகின்ற முயற்சிதான் ஒருவரின் எதிர்கால சாதனைக்கு காரணம். அந்தவகையில் நெடா அமைப்பு தரம்-06 தொடக்கம் உயர்தரம் வரை கல்வியை ஊட்டுகின்றது. எனவே கல்விக்கான அத்திவாரம் இங்கேயே போடப்படுகின்றது. இதனால் தான் நற்பிட்டிமுனை மாணவர்களின் வாழ்வு சாக்கடையாக போகாது சரித்திரமாக மாறுகின்றது.

"மாணவ சமூகமே நாட்டின் கண்", "கண்ணில்லையேல் வாழ்ந்தும் பயனில்லை". இன்றைய மாணவர்களே எதிர்கால நாட்டைக் கட்டிக்காக்க வேண்டியவர்கள். அதற்கு மூலகாரணம் கல்வி கிடைக்க வேண்டும். அதாவது கல்விக்கான வழி திறக்கப்பட்டால் மாணவர்களின் அபிவிருத்தி, கிராமத்தின் அபிவிருத்தி, நாட்டின் அபிவிருத்தி என அபிவிருத்தியடைந்து கொள்ள முடியும். அந்த வகையில் நாட்டினை அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் சமூக முகவராக இந்த நெடா அமைப்பு திகழ்கின்றது.

ஒரு நிறுவனத்தின் அபிவிருத்திக்கு பௌதீகவளம், மனிதவளம் ஆகிய இரண்டுமே இன்றியமையாதவை. அந்தவகையில் மனிதவளமாக பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியியல் கல்லூரி மாணவர்கள், உயர்தரம் கற்ற மாணவர்கள் அயராது உழைத்துக்கொண்டிருக்கின்றனர். பௌதீகவளமாக நற்பிட்டிமுனை கமு/சிவசக்தி வித்தியாலயப் பாடசாலை உதவுகின்றது. அந்தவகையில் இந்த வளங்களை பெருமனதுடன் அளித்துக்கொண்டிருக்கும் அனைவருக்கும் நெடாவின் பழைய மாணவி என்றவகையில் நன்றிகளைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நற்பிட்டிமுனை நாயகனாக என்றும் வாடாத மலராக மணம் வீசவும் பூரண நிலவாக பிரகாசித்துக் கொண்டிருக்கவும் வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திருமதி.ஜெனிதா பிரதீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியீட்டிய மாணவர்கள்


T.கேஷாந்த்


S.அனோஜன்


P.கேமிக்கா


N. ஷகித்தியா


S.கம்ஷாலினி



S.நிருதனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேடா

சந்தையில் விலை போகும்
பொருளாய் கல்வி ஆன போது
ஏழை என்றுமே
நாள் கூலி தானே!
கல்வி
ஏழைக்கு எட்டாக் கனிதானே!
என எண்ணியிருந்தேன்
விடியலாய் வந்து
இலவச கல்வியும் தந்தாய்
வெளிச்சமாக ஏழை வாழ்வில்
நீ தரியாய் ஆனாய் நேடாவே!
உன்னால் உயர்வடைந்தோமே
பதினேழு ஆண்டுகளில்
பல சாதனைகளால்
பலர்வேதனைகள் தடுத்து
நீ பெற்றெடுத்த
கல்விமான்கள் ஏராளம்
அனைவருக்குமாய்
ஆயிரம் ஆயிரம்
நன்றிகள் உனக்கு.



P. டெனுசியா
தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேடா வாழ்க

கல்விக்கோர் கலங்கரையாய்
எமை கண்ணுற்று
காத்து நிற்கும் கல்வியின் தந்தையே!
காலமெல்லாம் நீ வாழ்க!

எம் பிரதேசத்தில் பாழாய் போகும்
கல்வியின் நிலை கண்டு
தோழர்களோடு துள்ளி எழுந்து
கான மழையாய்
கல்வி தந்திட்ட கடவுளே!
காலமெல்லாம் நீ வாழ்க!

யாவையும் காசு என்ற போது
கல்வியும் காசு என்ற போது
வீட்டின் கதவு தேடி வந்து
கல்வி தந்த கர்ணனே!
காலமெல்லாம் நீ வாழ்க!



பதினேழு ஆண்டுகளில்
நீ தந்த பல்லாயிரம் சேவைகள்
நீ தந்த பல்வேறு கரிசினைகள்
நீ தந்த பல்வேறு அறிவுரைகள்
எமை இன்றும் உயர்த்தி
உனை இமயமாக்கி விட்டதே!
கல்விக்கோர் இமயமே!
காலமெல்லாம் நீ வாழ்க!

எழுத்தறிவித்தவன் இறைவன் என்பது போல
என்னைப்போல் எத்தனை பேர்
தொழுகின்ற இறைவனே!
காலமெல்லாம் நீ வாழ்க!
தொடரட்டும் உன் பணி
பரவட்டும் உன் புகழ்.

வி.தேனுகா
தரம் - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க சில முத்துக்கள்

1) இன்று நீ சொல்லும் பொய்யானது நாளையும் உன்னைப் பொய் சொல்லவே வைக்கும்.

2) ஒருவர் பழகும் முறை அவர் உள்ளத்தைக் காட்டும் கண்ணாடி.

3) உன்னில் குறையை வைத்துக் கொண்டு பிறர் குறையைத் தேடாதே.

4) உன்னை நேசிக்க வேண்டும் என்றால் நீ பிறரை நேசிக்க வேண்டும்.

5) அன்பின் ஆழம் எவ்வளவு என்பதனை பிரிவின் போதுதான் உணரமுடியும்.

6) அண்டவன் உன்னுடைய ஜாதியையும் பிறப்பையும் கேட்க மாட்டான். அவன் உன்னிடம் கேட்பதெல்லாம் நீ பூமியில் என்ன செய்தாய் என்பதை மட்டும்தான்.

7) ஒரு மணி நேரத்தில் ஒரு சிறந்த நண்டனை இழந்து விட முடியும். ஆனால் ஓராண்டு சென்றாலும் ஒரு நல்ல நண்பனைப் பெற முடியாது.


8) பட்டமும் பதவியும் பெற்றுயர்ந்தாலும் பெற்றோருக்கு பணிவதே பிள்ளைகளுக்கு பெருமை.

T. நிவேதனா
தரம் - 10





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்களது வீட்டுக்குத் தேவையான சகல
பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்


**KEETH MULTI SHOP**
**KIDDANGI ROAD**
**NATPIDDIMUNAI**




உங்களது வீட்டுக்குத் தேவையான அரிசி,**Gas** மற்றும்
சகல கட்டிட பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**SHAHILAN HARDWARE**
**KIDDANGI ROAD**
**NATPIDDIMUNAI**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்களது வீட்டுக்குத் தேவையான சகல பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**SANMUGA BROTHERS**
**KIDDANGI ROAD**
**NATPIDDIMUNAI-07**




போட்டோப் பிரதி, இணையதளவசதி, பட **CD, DVD**, போன் ரீலோட் **CD, DVD Writting, Computer Games** மற்றும் கணனி சம்பந்தமான அனைத்து விடயங்களுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

**SHAYAN NET CAFE & CD Selection**
**KIDDANGI ROAD**
**NATPIDDIMUNAI**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27 DEC
NAVITHAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org